333

உ

சிவமயம்

விக்கிரமாதித்த விலாசமென்னும்

# சண்பகவல்லி சரித்ரம்

இராமநாதபுரம் ஜில்லா

திருவுத்திரகோசமங்கை தேவஸ்தானம்

வித்வ க்ஷேத்ர தேரிருவேலி

## S. M.

## தங்கம்பிள்ளை

அவர்கள் இயற்றியது.

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம. குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1928 [அணா 4

(ரிஜிஸ்டர் காபிரைட்)

OF THE REGISTRAR OF ... No. ... 12 OCT 1928 ... MADRAS

உ

சிவமயம்.

விக்கிரமாதித்த விலாசமென்னும்

# சண்பகவல்லி சரித்திரம்.

இராமநாதபுரம் ஜில்லா

திருவுத்திரகோசமங்கை தேவஸ்தானம்

வித்வ க்ஷேத்ர தேரிருவேலி

S. M.

## தங்கம்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

---

மதுரை புதுமண்டபம் புக்ஷாப்

இ. ராம. குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது


மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1928 [அணா 4



(ரிஜிஸ்டர் காபிரைட்)

உ

சிவமயம்.

# விக்கிரமாதித்த விலாசமென்னும்

# சண்பகவல்லி சரித்திரம்.

## விநாயகர் துதி.

### வெண்பா.

நண்புடைய விக்கிரம ராஜன் றனைமணந்த
சண்பக வல்லி சரிதைசாற்ற—மண்புவியிற்
நாடும் பொருளுதவும் நாதன் கணேசனரு
ணீடுபத மேயெனக்கு நேர்.

---

இராகம்-உசேனி தாளம்-சாப்பு

### பல்லவி.

கஜமாமுகனே நின்
கதிதா யருளகனே ஓம் (கஜ)

### அநுபல்லவி மகுடங்கள்.

காரணமாகிய ஜின்மய பூரணனாகிய பொன்மய (கஜ)
கற்கக்கசடற மொழியென நிற்கப்பாரத மெழுதின (கஜ)
கவிபொழியுங் கிழவிதனை சிவகயிலை விடுத்தவனே (கஜ)

### சரணம்.

பஜனுயிர்த பாலாபிஷேகா பண்ணவர்போற்றும் பாதவிவேகா
புஜவலக்ர்த புண்யசல்யோகா பொங்கர சங்கரநன்சுதா
தஞ்சஞ்சொல் சங்கித இங்கித (கஜ)

---

# 1-வது சீன்.

அரண்மனை அரசன் விக்கிரமாதித்தன் மந்திரி பட்டி
மற்றனைவர்களும் தத்தமக்குரிய
ஆசனத்திலமருதல்
கொலு தர்பார்
விக்கிரமாதித்தன் குலதெய்வமாகிய
பைரவி காளியை ஸ்தோத்தரித்தல்.

---

தேவா சய்போசிவா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி தாளம்-ஆதி

கண்ணிகள்.

தேவி ஓம்பைரவி சிந்தையன்புடன் பணிந்தேன் மலர்தூவி
ஆவி மாசஞ்சீவி அரசுபுரிய அருள்செய்மேவி
பூவினிலுள்ள யாவரும் பொங்கமுடன் வாழ்ந்திடவும்
பொற்புகந் துதித்திடவும் எப்போதுங் கதித்திடவும்
புலம்பிடுங் கிண்கிணி சிலம்புயாணிமணி துலங்கிடும் நவமணி()

விக்கிர—ஹே! கருணாகரி இவ்வுலகினிடமாகவுற்ற சர்வஜனங்களும் குதூகலிக்கும்படி வாழ்ந்துவரவும் அதனுலெனது செங்கோல் நீடித்துறவும் அரசாக்ஷிபுரிய அருள்புரிவாயாக ஸ்துதிக்கின்றேன்.

விக்கிர—மந்திரி! நமது இராஜ்ய சீர்திருத்தங்களைப்பற்றிக் கேட்க விருப்புற்றேன் கூறுவீர்.

பட்டி—சக்ராதிபா! தங்கள் ஆக்ஞைக்கு மாறுதலுண்டோ கூறுவதற்குத் தயாராயிருக்கின்றேன்.

விக்கிரமாதித்தன் தேசவிசாரணை.

அமரநபி என்ற வர்ணமெட்டு

இராகம்-தேசிககுருட்டி தாளம்-ஆதி

பல்லவி.

மாநிலப்ஜேஜனம் வாழ்வையடைகிறா வாழ்வையடைகிறா
தாழ்வில்லா துய்கிறா (மா)

அநுபல்லவி.

சீருயராலயந் தினந்தினமறுகாலம்
திருவிழா பூஜையும் புரிகிற நேசமும்
தருமட மாலயம் நலமுதல் கூறவீர் (மா)

சரணம்

மறையவ ரிறையவர் வைசியர் சூஸ்திரர்
வண்மையா யவரவர்தொழில்களைப் புரிந்துமே
நம்முயர் நீதியைப் புகல்வனை நவிலுவீர் (மா)

பட்டி—அரசரேமேறு! "அகரமுதலவெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு" என்ற வேத வாக்கியப்படி பகவவானனுக் கிரகத்தால் வானின்றுலகம் வழங்கிவருதலாற் றானமிழ்த மென்றுணரற் பாற்று முதுமொழிப்படி மழை நீங்காமற் பெய்ய உயிர்கள் நிலைபெற்றுவருகையால் அம்மழை உயிர் களுக்கமிர்த மென்றபடி காலா காலங்களில் மழைவருகிப் பதும் அதனால் சர்வ ஜனங்களும் குதூகலமடைதலும் (தனக் குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான் மனக்கவலை மாற்றலரிது) என்ற வாக்கியத்தை யோர்ந்து ஆலயங்களில் உற்சவக்கோலம் நடாத்தியும் வேதமோதுதல் வேதியர்க்கழகு அதன்படி மறையவர்கள் யாகாதி முதலியவற்றைக் கிரமமாக நடத்தியும் இயற்றலு மீட்டலுங் காத்தலுங்காத்த வகுத்த லும் வல்லதரசு என்று கூறியபடி க்ஷத்ரியரும் வைசிய குலப் படி வியாபாரம் செய்தலும் வேளாளர் ஆசாரப்படி பூமி பயி ரிடுதல் முதலியவற்றைப் புரிதலும் மற்ற யாவர்களும் தந்தம் தொழில்களைப் புரிதலும் பாக்கியில்லாது திரைதருவதும் குடிகள் அறிவோர் கடனைத்தந்தும் அன்னதானத்திற்கதிக வொருதானமில்லை என்ற நீதிக்கிணங்க நம்தேசத்தில் ஆங் காங்கு நேமித்திருக்கும் அன்னச்சத்திரங்களில் இல்லையெண் ணாதுணவளித்தலும் முதலிய சம்ப்ரமங்களைக் கூறுவதற்குக் கிஞ்சிற்றுங் குறைவுகளில்லை

விக்கிர—அப்படியா மிக்க சந்தோஷம் உனது புத்தி தீக்ஷண்யத் தால் எனக்கு சாஸ்தி வயது ஆயிரமும் தவராதுற கானகம் சஞ்சரிக்கவேண்டும் அதாவது:—

முன்விருத்தம்

தேசிகரு மாணவர்கள் செய்திபுணர்ந் திடவே
சிறியோரைப் பெரியோர்செய் தொழிலதனிற் செறித்தும்
ஏசிலராம் பெரியோரை யீனமார் தொழிற்கே
இசைத்தும் அடித்லும் வைதும்இவ் வாறுசெயவும்
கூசியிடா திட்ட பணிசெய்து குருபக்தி
குறைவிலராய் நம்பினராய்த் துரோகமென்ப தின்றி
மாசிலராய் மனம்வாக்காற் காயத்தாற் குருவின்
வாக்கியம்பா லனஞ்செய்யும் மதிமாணு மாமே.

என்ற வேதவாக்கியப்படி புவியறுமாதம் போயிற்று புற்கற்குறும் வனுந்திரஞ்சென்று அறுதிங்களையும் அன்புடன்கழித்து இன்புறும் நன்னகர் எய்திடுவோம் இன்றேமேட நான்சரியாகினவா.

பட்டி—ஆம் அரசே!

(விஷயம்) தெய்விக பைரவியினுடைய வருதியடைந்து வேதாள வாகனரூடராய் யாவையும் சுற்றிம்பர்த்து விஜயமாநகரத்திற் கடுத்த அழகிய பூஞ்சோலையும் சத்திரமுமிருக்கக்ண்டு அதில் வந்து தங்கினர்.

---

## 2-வது சீன்.

### பூங்காவனம் சத்திரம்.

விக்கிர—மந்திரி! இப்பூங்காவின் அதிசயங்களைக் கண்ணுற்றீரா.

முன்விருத்தம்

தாழையின் முதிர்பழங் கமுகின் குருதேன்
மாழையின் கனிவிழை வருக்கை யின்பலங்
கூழைவெண் குரங்கயல் குதிப்பக் கூன்குலை
வாழையின் கனியெலா மடிய வீழுமால்

என்றபடி ஓங்கிவளர்ந்த தென்னையில் முற்றி...தெற்றுகளும் தேன் பொருந்திய மாமரத்தின் கனிகளும் வெடித்து ரசம் பொழியும் பலாக்கனிகளும் கமுகின் குலைகளும் மிகுந்திருப்பதனால்

அதனைப் புசிக்க எண்ணி ஏறிய வாலுற்ற வெண்குரங்கானது ஒருமரத்திலிருந்து மற்றொரு மரத்திலே குதிக்கின்ற அதிர்ச்சியினாலே வளைந்த குலைகளையுடைய வாழைமரங்களின் பழங்களெல்லாம் அழிந்து சிந்திவிழுகின்றனபார்.

பட்டி—அதற்குத் தக்கவாறு மதுவுண்டு வண்டின மாசுதிகேட்ட கிள்ளையும் குயிலும் கீதம்பாட செம்பொத்து மரங்கொத்தி சீர்தாளம் போட மாமயில் நடனமாடுகின்றது இச்சோலை முழுதும் மல்லிகை முல்லை மகிழங்கோங்கு முல்லை பிச்சி முசி வஞ்சி அம்சாகு மெல்லியரோஜா விளங்கும் சிவந்தி சொல்லவொண்ணாத சுந்தர புஷ்பங்களில் வாசனைகளானது எவ்வளவோ மனோரம்யத்தையே தருகின்றது பார்த்தீர்களா.

விக்கி.—அதனெனினும் அவாவரும்படியாயுள்ள சண்பகவாசம் கமழுகின்றதே இதுவரையிலும் அப்புட்பத்தைக் கண்டறிகிலேன் அடடா

## இசைந்தயேறும் என்ற திருப்புகழ் வர்ணமெட்டு.

நிறைந்தசோலை குளிர்வனமிதுததி மதியோரே
நிகழ்ந்தவாசங் கமழுதேநவிலுவீர் கதியோரே
சிறந்தசண்பக மிதுவரையறிகிலேன் இதுவேளை
திருந்தநேசமு லாவியேகொணருவீர் நலநாளே

விக்கிர—மதிவல்லபா! சண்பகமானது இங்குற்றதோ எங்குற்றதோ நீரிப்பூங்காவனமெய்தி எவ்விதத்தாலேனும் கொய்திவண் வருவீர்.

பட்டி—ஆக்ஞை

(விஷயம்) பட்டியானவன் சென்று எங்கும்பார்த்தும் அப்புட்பம் அகப்படாமையினால் அரசனிடந்தெரிவிக்க அவ்விருவர்களும் ஆலோசித் துற்றிருக்குங்கால் அவ்வழிமார்க்கமாக சிலர்கள் போகிறதைக்கண்ணுற்ற அரசன்

### விருத்தம்

வழியது செல்லு வோரே வருகுவீ ரன்பா யோர்ந்து
கழறிடா வாச மிங்கு கமழுதே சோலை சூழ்ந்த

தழைவுறு மிந்தச் சத்ரம் சார்ந்தவர் நகரம் யாது
பிழைவுறு துரைப்பீர் நல்ல பெட்புயர் குணம்வாய்ந் தோரே.

இன்புறும் அன்பர்களே சண்பகவாசங் கமழுதே எங்குளது இங் குளதா எங்களது சந்தேகமறப் புகலுமின்

வழிப்போக்கர்—சுந்தரர்களே! அவ்விடத்தைவிட்டு இங்கேவந்தால் கூறுவோம்.

விக்-பட்——தங்கள் சொற்படியே இதோ வந்தோம் சாற்றுவீர்

அகவல்

விஜயமாநகரம் விஜயங்கவரசன்
வசையுறுசண்பக வல்லியாய்புதல்வி
பிறந்திடும்போதே பெட்புயர்வாசம்
சிறந்திதுவறிவீர் சேயிழைக்காடவர்
வெறுப்பினள்மிக்க விரதமேபூண்டு
கற்பினைவழுவா கன்னிகையின்று
வருகுவள்சகியொடு வந்துயிச்சத்திரம்
தருகியேசெல்லுவார் ஜடுதிவிட்டகல்வீர்

வழிப்—ஐயமீர்! காதவழிக்கப்பால் விஜயபுரமுண்டு பரிபாலிக்கும் விஜயங்கவரசன் தவபுதல்வி சண்பகவல்லி ஜெனிக்கும்போது சண்பகவாசம் அவ்வாசமே இங்கே பரிமளமுண்டாகின்றது. அன்னவளது கோரிக்கையானது ஆண்காற் றடிக்கப்படா தென்றால் சௌந்தர்யக் குணாதிசயங்களை தாங்களே அறியக் கடவீர்கள். சுக்கிரவாரத்தன்று இத்தடாகத்தில் ஜலக்ரீடை புரிந்து சத்திரத்தமர்ந்து வெகு ஆடம்பரத்துடன் செல்லு வார்கள். இன்றுவரும் நாளாகையால் இவ்விடம்விட்டகல் வீர்கள். [இருவரும் சென்றனர்]

விக்கிர—ஹே அமைச்சரே! கவனித்தீரா இம்மாதைப்போல் வை ராக்கிய நிலைமையைப் பூண்டவர்களை இதுபரியந்தம் காண்கி லேன் அன்னவள் எக்காரணத்தையுற்றோ ஆடவர்களைப்பார்க் கப்படாதென்று பிரதிக்கினை பூண்டிருக்கின்றாள் அன்னவள் கோறிக்கையும் கற்பையும் பரிசோதிக்காது நாமேகுதல் நன் கல்ல.

## என்னகேள்விமுறை என்ற வர்ணமெட்டு

இராகம்:பிலகரி தாளம்-ஆதி

### பல்லவி.

கன்னிசண்பகமேல்
காதலாகினேன் கலாவதிமுக (கன்)

### அனுபல்லவி

கற்பா யிருந்த பொற்பா மவளைத் தப்பா ததிமருவிட (கன்)

### சரணம்

என்னைனிமித்தமா யிட்டவராகாத
யென்றயெண்ணங்களை நன்றாய்ப்பார்க்கவேணும்
ஏதோ சூதிது போலக் காணுது ஒது மதிசயமிக (கன்)

ஹே மதியூகி ஸ்திரீயினது த்ரேக வாசனையானது எவ்வளவோ மனோவுற்சாகத்தைத் தருகின்றது அவளது அபூர்வ சௌந்தர்யமானது எவ்விதம் பிரகாசிக்குமோ அறிகிலேன் ஆராய்ந்தெனதாசையை நிவர்த்திக்கிலேனென்றால் ஆவிதரிப்பதரிது

பட்டி—தெய்வத்தா லாகாதெனினு முயற்சி மெய்வருந்தக்கூலி தரும் ஊழில்லாவிடினும் முயற்சிபலனைத்தரு மென்றதைப் போல் கூடியவரையு முயற்சிப்போம் அன்னவள் இன்றவரும் நாளாகையால் தாங்களோர் விருத்தாப்ய கிழவன்போலும் இச்சோலையில் மறைவாக வீற்றிருங்கள் நான்பெண்போலவும் வடிவெடுத்து அன்னவள்பாற்சென்று அந்தரங்களை அறிந்து வருகின்றேன் பின் கருத்தின்படி செய்துகொள்வோம்

---

## 3-வது சீன்.

### அரண்மனை அந்தப்புரம் சண்பகவல்லி தன் சகிகளோடு சூழவிருத்தல்.

---

உமை வணக்கம்.

## ஸ்ரீராமபாதமா என்ற வர்ணமெட்டு

இராகம்-அமிர்தவாகினி தாளம்-ஆதி

பல்லவி

ஸ்ரீதேவியே நின்னருள் தெரிசனஞ்செய்தேன்யான்
தேவன்பாகமேவாழ் (ஸ்ரீ)

அநுபல்லவி

சோதிகடாக்ஷணி துன்பவிமோக்ஷணீ
தூயராஜராஜேஸ்பரி மாயன்சகோதரி (ஸ்ரீ)

சரணங்கள்

மலையத்துவஜராஜ மாதவச்செல்வியே
மதுரைமாநகராளும் மகுடசமர்த்தியே
தலமடியாரைப்போற்றும் தங்கஞ்சொல்நேசியே
சாலோகசாமீபசாரூப சாயுஜ்பவாசியே (ஸ்ரீ)

சண்—யே ஜெகதீஸ்வரி நான் முன் ஜென்மத்தில் இங்கிளாவனத்தில் சல்லியன் சல்லரியென்ற புறுவாக வாழ்ந்தூற்று குஞ்சுகளுக்கிரைகொணரும் பொருட்டு சென்றெடுத்துவந்து பார்க்கையில் மூங்கிலானது ஒன்றோடொன்று தாக்கி அக்கினி பற்றி குஞ்சுகள் மாளக்கண்ட. நாங்களிருவரும் மடிவதாய்ச் சபதங்கள் பண்ணிவிழப் போகுந்தருணத்தில்சல்லியனென்ற புறுவானது வீழாது செல்ல சல்லரியாகிய பெண் புறு அவ்வனத்துற்ற இங்கிளா தேவியினது வரத்தைப்பெற்று தீயில் வீழ்ந்துமடிய இச்சென்மத்தில் வருதிபடைந்த பிரகாரம் விஜயங்க ராஜனுக்கு நான் புத்ரியாக ஜென்மித்து சண்பகவல்லியென நாமகரணமிட்டு அறிவு வளரவளர பூர்விக்கியானந் தெரிந்து ஆடவர்களைப் பார்க்கக்கூடாதென்றும் மணக்கோலமாகிறதில்லையென்றும் மனவைராக்ய நிலையைப்பூண்டிருப்பதால் அதற்கு வழுவாது கருணைபாலிக்கப் பிரார்த்திக்கின்றேன். சகிகாள் என்னருகில் வீற்றிருங்கள்

சகி—அம்மணீ தங்கள் சித்தம்போல் வீற்றிருக்கின்றோம்

ஆடுதுமாமயில் பாடுதுகோகிலமே என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாகு தாளம்-ஆதி

பல்லவி

சுந்தரமாய்காமெல் லோர்களுஞ்சென்றிடுவோம்
ஜலக்ரீடை செய்வோம்
சந்த்ரவதனிகாள் சாந்தவிற்பனிகாள்
இந்தவுலகோர் மகிழ்ந்திடவேதநி (சுந்)

தொகையறு

பூஞ்சோலைசென்றுமே பூவினைக்கொய்துமே
பொற்புடன் சிரஞ்சூடியே
வாஞ்சையோடச்சத்திரங் தனிற்மேவிசதுரங்கம்
மகிழ்வுடன் விளையாடியே

பாட்டு

மங்களமாகவே யிங்குறுவோம்வருவீர்
ரதமதைக் கொணருவீர்
மாண்புடையசுக்ர வாரமதாகையால்
சாம்ப்ராஜ்யமுத்தி கடவுளைப்போற்றியே (சுந்)

வசனம்—தோழிகாள் இன்று சுக்ரவாரமாகையால் வழக்கம்போல் நாம் பூங்காவனஞ்சென்று பொய்கையில் ஜலக்ரீடைபுரிந்து ஈங்குறுவோம் வருவீர்கள்

சகி—அம்மணி அப்படியே செய்வோம்

---

## 4-வது சீன்.

### தடாகம்.

(விஷயம்) தடாகஞ்சென்றய்குவதும் பட்டிப்பெண் சகிபெண்களோடு சேர்தலும் ஜலக்ரீடைபுரிந்து மலர்களைசூடி சத்திரத்திற்றங்கி சதுரங்க முதலியவைகள் ஆடி தன்னரண்மனை சேர்தலும் சகிகள் அவ்வவ்வகுப்படி தங்கினர். நான்குமாதர்களோடு புகுங்கால் பட்டிப்பெண் ஆலோசனையுற்று

## 5-வது சீன்.

அரண்மனை அந்தப்புரம்

(தனக்குள்) நாமிந்தச் சண்பகவல்லியுடன் செல்லுவேனாகில் நீயாவ ளென வினவும் பக்ஷத்தில் எவ்வாறு கூறுவேன் திரும்பிச் செல்வதே நலம். [சுயவடிவங்கொள்ளல்]

தேரிமேரிஜோடி என்ற வர்ணமெட்டு

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி

பல்லவி

காணவந்து மாதின் கருத்தறியேன்
கவலையாகுதேன் செய்குவேன் (கா)

அநுபல்லவி.

தோணவில்லையே யொன்றுமிதுயோதோ மிகச்
சூட்சியாய்த் தோன்றுதேயிக் கனவிதோ
சொல்லுவதெப்படி அழகாமோ தரமாமோ
துயராமோ சினமாமோ குணமாமோ
சூக்ஷியைக்கேட்க அம்பாளிடம்போறேன் கேட்டு
சுந்தரனிடங்கூறி மனந்தேர்வேன் (கா)

பட்டி—ஆஹா சண்பகவல்லியின் அந்தரங்கத்தைத் தெரிய்வந்த தற்கு பிரயோஜனப்படவில்லை எனதரசனிடஞ் செல்வதும் உசிதமல்ல அதாவது:— ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும் அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் எனையாளு மீசன் செயல். இவ்வாக்கியத்தின் தன்மை இன்றுதினம் தெரிந்து கொண்டேன் ஆனால் குலதெய்வமாகிய பத்திரகாளியிடஞ் சென்று அந்தரங்கத்தைத் தெரிந்து வருவதே உத்தமம் இதோ செல்கின்றேன்.

---

## 6-வது சீன்.

ஆலவிருக்ஷமும் தடாகம்

(விஷயம்) பட்டியானவன் தாகசாந்திசெய்து ஆலவிருக்ஷத்தில் சயனித்து ஆலோசனையுற்றிருக்கையில் அங்கோர் ரிஷியும் ரிஷிப் பத்தினியும் இருவருண்டு முதலில் ரிஷியானவர் ஸ்நானஞ் செய்யவருதல் சயனித்திருக்கும் பட்டியைக்கண்ணுற்ற ரிஷியானவர்

ஆஹா இவ்வடிவழகனை நம் பத்தினி கண்ணுற்றால் நம்மையகற்றி இவனோடு கூடிவாழ்வதற்கு யாதொரு சந்தேகமில்லை இவனைப் பெண்ணாகச் சபிப்பதே முக்யகடமை.

ஓர் மூலிகையைப் பிடுங்கி பெண்ணாகக்கடவதென்று போட்டுச் செல்லுதல் (பெண்ணாகுதல்)

ரிஷிப்பத்தினி பின்வரக் கண்ணுற்று இம்மங்கையை நமது நாயக ரிஷி கண்ணுற்றால் நம்மையகற்றி இவளோடு கூடி வாழ்வதற்குக் கிஞ்சிற்றும் ஐயமில்லை யென நினைத்து ஓர் மூலிகையைப் பிடுங்கி ஆணாகக்கடவதென்று போட்டுச்செல்லுதல் (ஆணாகுதல்)

பட்டியானவன் எழுந்து இரண்டு மூலிகை வேரையும் எடுத்துக்கொண்டு (நான் கும்பிடப்போனதெய்வம் குறுக்கே வந்தாற்போலும் ஆனது மிக்கச் சந்தோஷம் இவைகளை நமதரசனிடம் சென்று கூறுவதே தகுந்த யோசனை இதோ செல்கின்றேன்.

---

## 7-வது சீன்.

பூஞ்சோலை சத்திரம்

பட்டி—வேந்தே நமஸ்கரிக்கின்றேன்

விக்கிர—கல்யாண் நீரிதுவரை யெங்கு சென்றிருந்தீர்

பட்டி—நான் தங்கள் சமூக காரியமாகத்தான் சண்பகவல்லியிடஞ் சென்றும் அந்தரங்கம் அறியாது நம் குலயீஸ்பரியினிடம் தெரிந்துகொள்ளலாமென்று செல்லுமார்க்கத்தில் ஆலவிருக்ஷமும் தடாகமுந் தோற்றினது அங்குசென்று தாகமருந்தி சய

னித்திருந்தேன் ஆங்கோர் ரிஷியும் ரிஷிப்பத்தினியும் தந்த இம்மூலிகையால் முன்பெண்போலும் பின் ஆண்போலும்ரூபமாகி இவ்விஷயத்தைக்கூற தங்கள்பால் வந்தேன

விக்கிர—மிக்க ஆனந்தங்கொண்டேன் இதற்கடுத்த யோஜனை புகலுமின்

பட்டி—ப்ரபூ இம்மூலிகையால் தாங்களோர் பெண்போலவும் நான் தங்கள் புருடன் சல்லியராஜன் போலவும் வடிவெடுத்துக் கொண்டு விஜயங்கவரசனிடம்சென்று கோரிய சண்பகவல்லி மாதிடம் சேர்ப்பித்து விடுகிறேன் பின்னால் கருத்தையறிந்து மணந்துகொள்வீர்கள்

விக்கிர—பேஷ் தகுந்த யோசனை

---

## 8-வது சீன்.

### அரண்மனை விஜையங்க வரசன் கொலுதர்பார்.

### வாதாபிகணபதேபதே என்ற வர்ணமெட்டு

இராகம்-அம்சத்தொனி தாளம்-ஆதி

பல்லவி.

வேதாந்தமே விஜயராஜேந்த்ரன் (தே)

அநுபல்லவி.

வீரசூர விவேகசுந்தரன் (வே)

சரணம்.

பூதலமேபுகழும் சற்கண்யன்
போதவடியாரை போற்றிடும் லாவண்யன்

வேதவந்தண ராசீர்கூறிட மாதராடிட மந்த்ரிசூழ்ந்திட (வே)

விஜய—மந்திரி நமதரக்குட்பட்ட நகரங்களிலுள்ள பிரஜைகள் யாவும் மகிழ்வுறும் விஷயாதிகளைக்கூறுவீர்.

மந்திரி—மகாராஜா நம் இராஜ்யத்தில் யாதொரு குறைவுகளில்லை.

விஜய—சந்தோஷம்

## சல்லியராஜனும் விக்கிரமப்பெண்ணும் விஜயங்க அரசன் முன்பாக வந்து

சல்லி—வேந்தே நமஸ்கரிக்கின்றேன்

விஜய—கல்யாண்

(விஷயம்) வேறு சிம்மாசனம் அளித்தல் சல்லியன் வீற்றிருத்தல்

விஜய—ஹே பூமா என்போன்ற அரசனைப்போல் தோற்றுகின்றது நீரிம்மாதுடன் இங்குறக் காரணம் யாது கூறுவீர்

### புள்ளிக்கலாடமயில்பாகன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

கண்ணிகள்

வீமாபுரி யாளுஞ்சல்யராஜன் என்பெண்
விக்கிரமாதித்தன்றங்கைமோசன் கடன்
வேதனையாவிங்குற்று மாதையடவுவைக்க
வந்தேன் மனம் நொந்தேன் (வி)

பூமாவென் னாட்டில்மழையில்லா பகுதிப்
பொருள்கொடுப்ப தற்கைவேறில்லா வாழும்
போதரசனின்மனை யாளினை அடவுவை
யென்றான் பொன்னீ யென்றான் (வி)

சல்லி—பூபா நான் வசிப்பது வீமாபுரி பெயர் சல்லியன் இவள் எனது தேவி விக்கிரமாதித்தனுக்குச் சகோதரி எனது இராஜ்யத்தில் மூன்று வருடகாலமாய் மழையில்லாததால் திரையளிப்பதற்கு வகையின்றி கவலையுற்றிருக்குங்கால் பாவி விக்ரமாதித்தன என்மீது சினந்துற்று உனக்கைவேறில்லையேல் நின் மனையாளை யாரிடத்திலேனும் அடவாகவைத்துப் பகுதியை அளியென்றான் உனக்கில்லாத அவமானம் எனக்கென்னவென்று தங்கள்பால் வந்தேன் எனது மனையாளை அடவாகவைத்து பொன்னாயிரந் தருவீராகில் செலுத்தியான் எங்கேனுஞ்சென்று யாசித்தாவது பொருளைக் கொடுத்துப் பெண்ணை மீட்டிக்கொள்கின்றேன்.

## இப்படிப் புலம்புவதுமேன் என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான்தோடி தாளம்-ஏகம்

பல்லவி

இப்படியான் கேட்டறிகிலேன் உம்மை
இந்தவிதம் பேசலுற்றால் எங்களையெவ்விதஞ் சொல்வார் (இ)

அனுபல்லவி

அப்படியே யாகிற்பெண்ணை அடவாக வைத்துப்பொன்னை
அளிக்கத் தாமோவென்னை யார்தான் மதிப்பார்பின்னை (இ)

சரணம்

மாறுயாக் கொள்ளாதீர் வார்த்தைதன்னைத் தள்ளாதீர
இதோதாரேனாயிரம்பொன் னீய்வீர் தேர்வீர்தேவிசுகமொடு()

விஜய—ஹே சல்லியராஜரே அவ்விக்கிரமாதித்த பூபதி உம்மையே இவ்விதம் பேசினால் என்போலொற்ற அரசர்களை எவ்வாறு கூறுவார். உம்முடைய தேவியை அடவுவைக்கவேண்டாம். இனமாக நீர் கேட்டபொருள் தருகின்றேன் பெற்றுக்கொள்வீர்.

சல்லி—கோமா தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே வாயினாற் சுட்டவடு என்பதைப்போல் அச்சண்டாளன் சொன்னசொற்களானது எனது நெஞ்சம் பகீர் பகீரென எரிகின்றது அடவு வையாது பொருள் கொடுப்பேனாகில் தன்வசமிருந்து செலுத்தினனென்பதாய் எண்ணி என்னைப் பொய்யனென்பதாக நினைப்பான் ஆகையால் அடவுவைத்துக் கடன் வாங்குவதே முறை.

விஜய—இதுவும் ஓர் யோசனைதான் ஆரடா பொக்கிஷத் தலைவன் ஆயிரம்பொன் கொடுத்தனுப்புவாய். [கொடுத்தேக]

சல்லி—தங்களிடம் ஓர் வார்த்தைக் கேட்டுக்கொள்கிறேன் அதாவது என் பத்தினியானவள் மிகவும் செல்வவதியாயுற்றிருந்தாள். ஏதோ எனதுகால வித்தியாசத்தால் துன்பம் பீடிக்கலாயிற்று. தங்கள் புத்திரி சண்பகவல்லியிடம் சேர்த்து ஒற்றுமையாக வசிக்கச்செய்வீர்கள்.

விஜய—பேஷ் எனது யோசனையும் அதுவே ஆகட்டும் சென்று வருவீர்.

சல்லி—நல்லது.

விஜய—என்னரும் புதல்வியே இம்மாது விக்கிரமாதித்தராஜன் சகோதரி விக்ரமப்பெண் ஏதோ பொருளிடுக்கத்தால் இம்மாது நாயகர் நம்பால் அடவுவைத்து சென்றிருக்கின்றார் அன்னவர் வரும்வரையிலும் ஒருவரோடொருவர் ஒற்றுமையாயும் விட்டுப்பிரியாமலும் வாழ்ந்துவரக்கடவீர்கள்

சண்—தங்கள் வாக்குக்கெதிர்வாக்குண்டோ வருதிபோல் நடக்கின்றேன்.

## கபாதரகா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி தாளம்-ஆதி

பல்லவி

ஜோராய் வாழுவோம் நாம்
சுகமாக இருபேரும் (ஜோ)

அனுபல்லவி

வேராகவேயென்னை நினைத்திடவேண்டாம்
மிகவும் நல்லபெயர் பூண்டோம்
விரும்புந்தந்தைமொழி தனையினித்தாண்டோம் (ஜோ)

சண்—ஹே விக்ரமஸ்திரீ நீயென்னிடம் வந்தநின்மீது விசனிக்கத்தக்கதில்லை நாம்பிரியாது வாழ்ந்து வருவோம்.

விக்கிர—எனதன்பார்ந்த நேசி உனது நோக்கம்போல் வாழக்கடவோம்.

(விஷயம்) பட்டியானவன் கானகஞ்சென்று பொருளை புதையல் செய்து அணில் ருபமாகி சண்பகவல்லி அந்தரங்கம் அறியும் பொருட்டு இரவில் அரண்மனையில் வசித்தல்.

விக்கிர—(தனக்குள்) நான் வந்து எவ்வளவோ நாளாகியும் சண்பகவல்லி கொண்ட கருத்தை அறிய முடியவில்லை. நாளோ சமீபமாகிறது நானிவளைப் பிரிந்து வேறு தனியறைபுகுந்து

கவலையுற்றவளைப் போலிருப்போம் பின்னால் நடக்குஞ் சங்கதிகளையறிந்து மனதைப் பூர்த்திசெய்வதே தக்கயோசனை.

(தனியறையுறுதல் சண்பகவல்லி எழுந்திருந்து)

சண:—இதென்னவோ காரணமாயிருக்கிறது விக்ரமப்பெண் நம்மைவிட்டு அரைக்ஷணமாவது பிரிந்திராள். அவ்விதமிருக்க தனியறை செல்லக்காரணம் யாது சென்று வார்த்தையாடி அழைத்து வருவோம்.

சண்—என் வாஞ்சை ரஞ்சிதமே நீ இவ்வித அலங்கோலமாகச் சயனித்திருக்கும் நேர்மையை என்பால் கூறுவை.

விக்கிர—எனதபாஞ்சியே எனது கவலையைக்கூறினால் நிவர்த்திக்கப் போகின்றயோ.

சண்—நீயென்ன இவ்விதம் பகருகிறாய் முன்னடந்த ஓர்கதையைச் சொல்லுகின்றேன் கேள்.

## நொண்டிச் சிந்து.

சதுரகிரி மாநகரம்—ஆண்ட
சைந்தவனுக் கோர்புத்ரன் சித்ரசேனன்
பதியில்வாழ் வேடனுக்கோர்—சேயன்
படித்தனர் கல்வியை ஜிங்கனுமாய்
பிரியாது வாழ்ந்துகலைகள்—முற்றும்
பெட்புடன் வாசித்து மகிழுகையில்
திருமுடி புனைந்தாள—வேடன்
சிந்தை மகிழ்ந்துமேயவ் வரண்மனையில்
வசிக்கலா மென்றுமகிழ—ராஜன்
மறந்திட சிங்கன்றன் றொழில்புரிய
பசியுறக் கானிலேகியே—வேட்டம்
பரிவுடன் செய்துமொன்றுங் கிடையாமல்
வருந்திநடந் தோர்வழியில்—செல்ல
மலைக்குகை யினில்மங்கை மடிமீது

அருந்தவ முனிதுயிலக்—கண்ட
அணங்கையெவ் விதமாவ தாசனிடம்
சேர்த்திடில்சம் மேற்பக்ஷம்—முறுவர்
க்ஷேமத்தோ டிருக்கலா மெனநினைந்தே
ஆத்திரத் தோடுரைக்க—வேந்தன்
அகமகிழ்ந் தவனுடன் சேனையுடனே
மலைக்குகை யருகிருந்தே—ஸ்நேகா
மங்கையையென் பாலகற்றி யேமுனிவன்
தலைமடி மீதுவைப்பாய்—நான்
ஜடுதியில் வந்துவதை செய்தேயகல்வோம்
செல்லுவா யென்றுரைக்க—வேடன்
சென்றுஅம் மங்கையின்பால் நின்றுநிகைக்கத்
செல்லடா ரிஷிவிழிப்பார்—உன்னைத்
தீய்த்திடு வாரென மாதுவுரைக்க
இந்த முனிவனிடத்தில்—நீ
இருப்பது அழகல்ல வுனக்கேற்ற
சுந்தரன் றனையழைத்தே—இங்கு
தோன்றினே னியாசனிடஞ்சேர்வாய்
என்றுரை செய்திடவும்—அவ்
வேந்திழை யிணங்கியே வேந்தனிடம்
சென்றிட மன்னன்கண்டு—மிகச்
சிறந்து மகிழ்ந்துவேடன் றனைமறந்து
மங்கையாள் தனையழைத்து—வாழு
மாநகரஞ் சென்றிட வேடன்திகைத்து
அங்க முருகிவாட—நித்திரை
அகன்று ரிஷியெழுந்து பார்க்கையிலே
பெண்ணினைக் காணாமல்—நதி
பெருஞ்சினத் துடன்கூவிச் சபிப்பதற்கே
எண்ணமீ துறுங்காலில்—வேட
னிருகண் களிலுந்தாரை யோடியழவே

வேடன்மீ தகமிரங்கி—வந்த
விபரமதை யொழியா நுரைப்பாயென
நாடியே வேடன்பணிந்தே—முற்றும்
நடந்தவை கூறிடவும் ரிஷிகேட்டு
மாதினை யகற்றிவிட்டாய்—எந்தன்
மாதவத் திற்கதுவும் நலமாகும்
ஈதோர் சினேகிதமோ—வுற்றால்
இயற்றுவேன் முன்னடந்த கதைகேளாய்

## அகவல்.

பிரமாபுரியாள் பெட்புயர்பௌத்தன்
இரணபத்திரனெனும் இசைந்தநன்மந்திரி
ததிமனன்பெற்ற சன்மார்க்கன்மந்திரி
புதல்வனுங்குணபத் திரன்பிரியாது
வாழ்ந்திடும்நாளில் மன்னவன்சேய்க்கு
சோழதேசத்தையாள் சுந்தரருசனெனும்
துரையவன்பயின்ற சாதவல்லியை
திருமணப்புரிய சிறந்தநற்கலிங்க
அமைச்சுசூரன்சேய் அமூர்தவல்லியை
அமைச்சுநற்சேய்க்கு அருளினர்மணமே
பிதாவரண்மனையில் பெண்ணிருபேரும்
சுதந்தரமாக சுகித்துவீற்றிருக்க
மன்னனுமந்த்ரியும் மாண்புடனழைக்க
நன்னகர்விட்டு நடக்கமுன்னரசன்
ஆந்தையோர்சந்த மறைந்திடக்கேட்ட
சாங்கம்நல்மந்திரி சகலபாஷைகளும்
கற்றவனுதலாய் கருதியேதுன்ப
முற்றிடுமெனமந் திரிமுன்னடக்க
பின்னுமவ்வார்த்தை பிந்தினர்மரிப்பார்
சொன்னதையறிந்து துயருடன்சென்று
சோழமாநகருறசு சுந்தரவேந்தன்
வாழியென்றேத்தி வருவதற்கிரண்டு

சிவிகைகாலாட்கள் சீக்கிரமனுப்ப
அவமருந்ததைதின்னத் தாசனுங்களித்த
ரதமதில்மந்த்ரியும் ராஜன்மற்றதினுற
இதமுறும்விடுதிலும் இவ்விதமாக
வசித்திடவாசன் மனைவியாள்கேட்டு
புசித்திடஅன்னம் பொற்றட்டிலேந்தி
கொண்டுமேவந்து கோமான்றனையே
கண்டுமிழ்ந்திட்டாள் கடுநித்ரைபுரிதலால்
சென்றனள்மந்திரி சேயிழைபின்வர
அன்றிராவுற்றதால் யார்க்குமேதெரியா
மடமதுக்கேகி மங்கையாளடைந்த
மூடவனைக்கண்டு முன்னிற்கவேயவன்
இதுவரையென்செய்தா யென்றுமேகேட்க
மதியிலாக்கணவன் வந்ததால்தாமசம்
மணமதுவுற்ற மங்கையாயெனையினி
அணைவதுமுறையல்ல அகலுவாயென்றான்
முன்னின்றுவருந்த மூடவன்பார்த்துந்தன்
மன்னவன்சிரசை வாளாயுதத்தால்
கொய்துமேவந்தால் கூடுவேனென்றான்
தையல்கேட்டுறுதியாய்த் தலைதனைத்துணிக்க
மந்திரிவருந்தி மாதினைப்பிடிக்க
சுந்தரிமுறையிடச் சூழ்தலையாரி
கண்டவ்விருவரைக் காவலன்முன்பாய்
கொண்டுமேவிடுக்கக் கொடியதோர்ம[ங்கை] [illegible]
தந்தையேகேளும் தலைவனு [illegible]
சுந்தரமாகச் சுகித்திடும்போது
மந்திரியானவன் மன்னனைத்து[ணி]த்து
எந்தனையணைய யிழுத்தனன் அலறினேன்
தலையாரிபிடித்தே தங்கள்முன்வி[டு]த்தார்
கொலையெனக்கேட்ட குசனெனுமாசன்
மந்திரியிடத்தில் வதைத்திடச்சொன்னான்
அந்தகல்மந்த்ரியும் ஆலோசனையும்

றுள்ளதையெங்கட் குறையெனமந்திரி
கள்ளமில்லாமல் கழறிடயாவும்
கேட்டுமந்திரிமார் கிலேசம்விடுத்து
நாட்டிகத்துடன்மடந் தனிலொளிந்திருக்க
நங்கையாள்சென்று நடந்ததைகூற
அங்கவன்கேட்டு அகமகிழ்ந்தனைய
மந்த்ரிகள்பிடித்து மன்னன்முன்விடுக்க
விந்தையைக்கேட்டு வேந்தன்கவிழ்ந்துற
குணபத்ரமந்த்ரி கூறினன்யாவும்
அனைந்திருவரையும் அகதணாந்துணித்து
காடேகெதியெனக் காவலன்சென்றான்
பீடுயர்மந்த்ரி பிரேதம்நற்பேழையில்
அடக்கியேதூக்கி யனுகினன்றனது
மடக்கொடிதேவி மனையுமறிந்து
இறையவனுயிர்ப்பித் தெழுந்தால்மட்டும்
உறுவேனகாம் உயிர்ப்பிக்காவிடில்
மரணமேயடைவே னெனமனதுற்று
வாவுயிர்கலிங்க மாநகரடைந்தான்
மாதுலன்கண்டு மகிழ்ந்துமேவிடுதி
தீதில்லாதமைக்கச் சென்றிருக்கையிலே
மந்திரிமனைவி வகைகளபாகம்
சுந்தரத்தட்டிலில் தொகுத்துஆங்குற்றிட
[illegible]கொரைபுரிதல் நேர்த்தியைக்கண்டு
பத்திரகாள் [illegible]விபாற்செல்ல
மந்திரியறிந்து மன்னன்ம[illegible]போல்
இந்தையிற்றேற்றி சென்றுபின்காண்க
பகவதியெந்தன் பத்தாவந்துற்றதால்
புகன்றதோர்சபதம் போல்பெலியேற்பாய்
என்றுவாளாலே இறக்கப்போந்தருணம்
மன்றுள்நின்றுடும் வாலையாளுதித்து
இனிதுடன்பெற்றே னென்றுப்நீவாழ்க
உனதுமணாளனே டுற்றவவ்வரசன்

இறந்தனன்பிரேத மெடுத்துயிங்கூற்றனன்
சிறந்துயிர்பெற்றெழ தீர்த்தந்தெளிப்புங்
தந்தனனதினால் தானுயிரெழுவான்
சிந்தனையிலையென நிகழ்த்தியேமறைய
மன்றுளேமகிழ்ந்து வருவதற்கேமுன்
சென்றுமேமந்திரி சிந்தையில்மகிழ்ந்து
துயின்றவன்போல சுந்தரனிருக்க
அயில்விழிமானாள் அருகினிலமர
மந்திரியெழுந்து வழுத்திடக்கணவை
சுந்தரிபணிந்து சொல்லினள்விபரம்
மன்னனையெழுப்ப மந்த்ரியைப்பார்த்து
என்னயிங்காச்சர்யம் இயம்புவீரென்ன
நடந்தவைகூற நாதனின்செயலென
மடந்தையைவாழ்த்தி மாநகர்சேர்ந்தனர்
மன்னனுக்கேற்ற மங்கையைமணர
உன்னதசிநேக முயர்ந்துவாகும்
என்றுமேகூறி யிருடியரகன்றார்
இன்னுமேதாவ தியம்பிடாய்கவையே.

[ஒவ்வோரிடங்களில் சமயோஜித வார்த்தைகூறல்]

## ஞாயந்தானோ நீர்சொல்லும் என்ற வர்ணமெட்டு

இராகம்-பியாகடை தாளம்-ரூபகம்

பல்லவி

கருத்தைக்கூறுவேன் கேளாய் எந்தன் (௧)

அநுபல்லவி

காதற்சண்பக மாதே நெடுநாளாய் (௧)

சரணம்

வருத்தங்கொண்டே னுந்தன்மீது தக்க
வாலிபனையடையாது செய்
விருத்தியில்லாதபோது இந்த
மேதினியிற்சுகமேது எண்ணி
சிரத்தையோடிருந்த செய்தியையோது (௧)

விக்கிர—எனதாசை நஞ்சனீ நான் யாதொன்றுக்கும் கவலைப்பட்டவில்லை. தந்தை மகற்காற்றுதவிய வையத்து முந்தியிருப்பச் செயல் என்றதற்கிணங்கி, புத்திரர்களால் மோக்ஷமெய்துவரென வேதாகமங்களை நீயறிந்த விற்பனியாயிருந்தும் விவாஹத்திற்குட்படேனென்ற வைராக்கிய நிலையைப்பற்றி சற்று வருந்தலாயினேன், நீயேனோ பருவகாலத்தை தவிள்க்கின்றனை நவில்.

சண்—ஏ சற்குணபூஷணி! நீயிதற்குத்தானோ கவலையுற்றனை என் கருத்தைக் கூறுகிறேன் கவனி.

மருகேலரா என்ற வர்ணமெட்டு.

இராகம்-ஜெயந்தஸ்ரீ தாளம்-ஆதி

பல்லவி

என்ன சொல்லுவேன் எவ்வாறுய்குவேன் (எ)

அனுபல்லவி

முன்னடைந்த ஜென்மம் முடிவுறுக்கன்மம்
அன்னிதமோ துன்பம் அடைந்தேனே வன்மம் (எ)

சரணம்.

இங்கிளா வனத்திருந்தேன் புருவாக
என்கணவன் சல்யன் என்பேர் சில்லரியே (எ)
இருக்குங்கால்குஞ்சுக் கிரைதேடச்செல்ல
செருக்குற்றுமூங்கில் நீண்டெறிந்துகொல்ல (எ)
வந்துபார்க்கவெந்து மடியவேநொந்து
அந்தமூலில்வீழ ஆண்புருவகல (எ)
ஆடவரைநம்பப் படாதெனத்தக்க
நீடாசுவேந்த னிடத்திற்பிறக்க (எ)
வரத்தைநான்பெற்று வாசனையோடுற்று
தரித்தேனின்னகர் சண்பகவல்லியென்பார் (எ)
ஆண்வாடையுதவா தவனியில்வாழ்ந்தேன்
காணுவாயேயெந்தன் கருத்தைப்புகன்றேன் (எ)

சண்—இதுவே எனது விர்த்தாந்தம் மதமைப்பூ[illegible]

விக்கிர—ஆஹா இதென்னவோ ஆச்சரியமாகயிருக்கிறது நன்றாய் கவனித்தேன் நான் கேட்டதுஞ்சரி நீ கொண்ட விரதமுஞ் சரி.

(விஷயம்) அணில் ரூபமாகக் கேட்டுக்கொண்டிருந்த பட்டியானவன் களிப்புற்று ஒருவாரத்திற்குள் அறிகிறேனென்பதாய்க் கூறி புதைத்துவைத்த பொன்னுயிரமும் எடுத்துக்கொண்டு விஜையங்கவரசனிடம்வந்து,

---

# 9-வது சீன்.

## அரண்மனை சபாமண்டபம்

சல்லி—காவலா தங்கள் புண்யவசத்தால் பொன்னுயிரமும் இதோ சேகரித்து வந்திருக்கின்றேன் எனதுமனைவியை அனுப்புவீர்,

விஜய—நல்லது ஹே சண்பகம் விக்ரமப்பெண் கணவன் வந்திருக்கின்றார் அனுப்புவாயாக.

சண்—ஆக்ஞை. விஸ்வாச நேசி உன்னையழைத்துச் செல்ல நின் கணவன் வந்திருக்கின்றும். அனுப்புவதற்கு மனமானது ஒர்மைப்படவில்லை என்செய்வேன்.

விக்கிர—எந்தனுக்கிசைந்த சுந்தரி ஆவியும் உடலும்போல் பிரியாதிருந்தோமே எவ்விதமாகப் பிரிந்தேகுவேன் மித்ரி நானொரு வாரத்திற் கொருதடவை வந்து வார்த்தையாடிச் செல்கின்றேன்.

சண்—மித்ரி என்மீது அன்பிருக்கட்டும் சென்றுவா.

(விஷயம்) வடிவமாற்றி அரசனும் மந்திரியும் நிகழ்ந்தவைகளைக்கூற மகிழ்வுறுங்கால் விக்கிரமாதித்தன்

நையாஜோபன்வாலிகே என்ற வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தான்தோடி தாளம்-ஆதி

பல்லவி

133861

சண்பகவல்லியின்மேற் றன்மோகமே
கொண்டேன் நான் தாகமே (சண்)

அனுபல்லவி

மண்புகழ்நேசி மங்கையர்க்கரசி
வசியவுல்லாசிதனை மணம்புரிவேன் என்று மணம்புரிவேன்
மாசில்லர்மந்திரி யோசனைகூறுவீர் (சண்)

விக்கிர—ப்ரதான் தெய்வீக சுதந்தர சண்பகவல்லியை எக்காலம் மணம்புரிவேன்.

சாதரமுககுகா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி தாளம்-ஆதி

பல்லவி

வேந்தர்கட்கதிபதி சாந்தநிதி (வே)

அனுபல்லவி

ஏந்தலே நாம்கழைகூத் தாடிபோல்பூண்டு
யானொரு பெண்போலும் தான்குருவாகுவீர் (வே)

சரணம்

நான் மன்னவனிடம் நான் ஆடல்புரிவேனுன்
அதிசயிப்பார் நான் தங்களைக்கூறி
அழைத்து வரச்செய்வேன்பெண் ணுவியே யாகாதென்பீர் ()

பட்டி—சக்ராதிபா தாங்கள் கழைக்கூத்தாடிகளுக்கெல்லாம் குருவாகவும் நானேர் சுந்தரப்பெண்போலவும் ரூபங்கொண்டுஅவ் வேந்தனிடஞ்சென்று எனது இந்த்ர மந்த்ர ஜால முதலியவற்றை யாபேர்களும் பார்த்து ப்ரமிக்கும்படி நர்த்தனஞ் செய்வதோடு மையலுறும்படியான மோகனமந்த்ர உற்சாடனஞ் செய்வேன் திப்ரமைக்கொண்டு உனக்குக் கற்பித்த ஆசான் யாரெனக் கேட்பார், நான் தங்களைப்பற்றி வனந்திரத்திலிருப்பதாகக் கூறுவேன். அரசன் முதலியவர்களோடு தங்களைக் காண்பதற்கு அவாவுடன் ,வருவார்கள் வராத விபரத்தைக்கேட்பார். தாங்கள் சண்பகவல்லி கூறிய இங்கிளாவளத்திலுற்ற புறாக்களது விர்த்தாந்தத்தைக்கூறி தீயில் ஆண்புறா வீழ்ந்து மடிந்ததென்றும் பெண் புறா தப்பித்தோடியதென்றுங்கூறி அதனல் மானுஷிக கழை நர்த்தன வங்கிஷத்

தில் அவதரித்த பெண்களை நம்பக்கூடாதென்றும் பெண் வாடையே அணுகக்கூடாதென்றும் விரதம் பூண்டு இவ்வாரண்யத்திலேயே வசிக்கின்றேனென்று கூறுவீர்கள் பின்னும் நடக்கும் சங்கதியைத் தெரிந்துகொள்வோம்.

விக்கிர—இதுவே நல்ல யுக்தி

(விஷயம்) விக்கிரமாதித்தன் கழைக்கூத்தாடியைப்போலவும் பட்டியானவன் கழைநர்த்தனியைப்போலவும் வடிவெடுத்து எதிர்பார்த்திருக்கையில் சில கழைக்கூத்தாடிகள் அவ்வழி மார்க்கம் செல்வதைக் கண்ணுற்ற குருக்கூத்தாடியாகிய

வி-கூ—ஏ கழைக்கூத்தாடிகாள் நீங்கள் எங்கு செல்கின்றீர்கள்

கழை-கூ—நாங்கள் அனேக இடங்கள்சென்று இப்போது விஜைய புரத்தரசனிடம் சென்று எங்களது தொழில்களைப் புரியச் செல்கின்றோம்.

வனசாக்ஷி என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி தாளம்-ஆதி

பல்லவி

கூத்தாடிகாள் கூட்டிச்செல் வீரிம்மாதை (கூ)

அநுபல்லவி

குணமிகும் வனிதைநர்த் தனம்புரிந் திடுமிவள் (கூ)

சரணம்

பார்த்தகண் பூர்க்கும் பாரினிலெவர்க்கும்
படைத்தபிரமன்முதல் பார்த்தால்மிர்ம்க்கும்
வாத்தியாரெனிலெனை வழுத்துவீரெவர்க்கும்
மவுசையுற்றவரே பவுசுபெற்றவரே
மதிமிகுத்தவரே வசியங்கற்றவரே (கூ)

வி-கூ—ஹே சம்ப்ரமக் கூத்தாடிகாள் இதோ நிற்கின்ற மாதையும் அழைத்துச் செல்வீர்கள்.

கழை-கூ—நல்லது கூட்டிச்செல்கின்றோம் அம்மா எங்களுடன் வா

பு-பெ—நல்லது வருகிறேன்

(விஷயம்) விஜயநகரம் அடைந்தனர் பட்டிப்பெண்ணானவள் கழை நர்த்தனர்களோடு விஜையங்கவரசன் சமூகம் வந்து

---

## 10-வது சீன்.

### அரண்மனை விஜையங்கவரசன் கொலுதர்பார்

இராமமூர்த்திபிரணதபாலா என்ற மெட்டு

இராகம்-கல்யாணி தாளம்-சாப்பு

பல்லவி

விஜையரங்கத் தரசேவும்மை
வேண்டிவந்தோம் சரணம் சரணம் (வி)

அநுபல்லவி

உஜ்ஜ்வலமா வுயர்ந்தநேமா
உரைப்பீர் படிப்போம் சிறப்பாய் நடிப்போம் (வி)

சரணம்

கழையைநாட்டிக் கயிற்றைப்பூட்டி
வழுத்தொண்ணாத வசியங்காண்பிக்க (வி)

இந்த்ரஜால மகேந்த்ரஜாலம்
எந்தநாளுங் கண்டறியாக்காக்ஷி (வி)

ப-பெ—வேந்தே நமஸ்கரிக்கின்றேன் நாங்கள் அனேக இடங் களுக்கெல்லாம் சென்று வேணவரிசைகள் பெற்று தங்கள் பிரதாபங்களை கேள்வியடைந்து எங்களது தொழில்களை காண்பிக்கும்பொருட்டு தங்கள் சமுகம் நாடி வந்தோம்.

விஜய—நல்லது உங்களது தொழில் முதலியவற்றை செய்வீர்கள் பார்ப்போம்,

(விஷயம்) கழை முதலியவைகள் நாட்டி மேளவாத்யங்கள் முழங்கக் கேட்ட சண்பகவல்லியானவள்

சண்—இதென்னடி புதிதாய் இடிமுழக்கம்போல் சப்தங்கேட்கின்றது.

சகி—மகாராணி கழைக்கூத்தாடிகளில் ஓர் பெண்ணணவள் வந்திருக்கின்றார்கள் அவளது சௌந்தர்யத்தைக் கூறுவதற்கியலாது அவர்களது தொழில்களைக் காண்பிக்கும்பொருட்டு மேளவாத்தியங்களை முழக்கஞ்செய்கின்றார்கள்

சண்—அடி நான் ஒருபோதும் பார்த்ததில்லை. தற்சமயம் அவ்வதிசயங்களைப் பார்க்கவேண்டும். ஆடவர்கள் கண்ணுறாது அதற்கேற்ற உப்பரிகை தயாரிக்கச்செய்வீர்கள்.

சகி—அவ்விதமே ஆகட்டும். (அரசனிடந் தெரிவிக்க டோரா மூடிப் பித்தல்)

(விஷயம்) சகலர்களும் சூழ்ந்திருக்க சண்பகவல்லி சகிகளுடன் உப்பரிகையில் வீற்றிருத்தல்.

---

## 11-வது சீன்.

### அரண்மனை சமீபம் கழைகளை நாட்டல்

### பட்டிப்பெண்சொல்

### ஆதிமகமாரியடா என்ற கரகப்பாட்டு மெட்டு

மாசபையில் வீற்றிருக்கும் நன்றாய் பார்த்திருக்கும் புவி
மன்னர்களே விற்பன்னர்களே
காசினியில் தானறியீர் இதைப் போலறியீர் மஹா
காயசித்தி விநோத மாயாசித்தி
இந்த்ரஜாலம் மகேந்த்ரஜாலம் வந்தேனிக்காலம் யாரும்
இயம்பிடாத தோர்கண் கட்டுஞ்ஜாலம்
வித்தையைப்பார்த் தானந்திப்பீர் சொல்வேன் மோனந்தப்பீர்
இதோவிளையாடு கின்றே னதிசயிப்பீர்

விஷயம்—மோஹினிவேடங்கொள்ளுதலும் அரசர் முதலியவர்கள் ப்ரமைகொள்ளுதலும் செய்தறியாத வித்தைகளைச் செய்தலும் கண்டுகளிப்புறுங்கால் பட்டிப்பெண் ஆகாயத்திற்கும் பூமிக்கும் ஒருவடம் தொடர்பாகத் தெரியும்படிசெய்து அதிலொருவனை தனது நாயகனென வகித்து அவ்வடத்தில் ஏற்றிவிட மறைவாகுதலும் தேவர்கள் தலைபானது பூமியில் வீழக்

கண்ட யாவர்களும் திகைத்திருக்குங்கால் கன்னியின் கண வன் தலையும் விழும்படி செய்து

## வில்லைவிளைத்தம் பெய்திடுவேன் என்ற வர்ணமெட்டு

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி

**கண்ணிகள்**

தெய்வசபைதனிற் சென்றுமே வளர்
தேவர்கள்சிரங்களைக் கொய்துமே இந்த
வையகந்தனில்விழப் பாருமே என்
மன்னவன்செய்தகெம் பீரமே (தெ)

அடடா இதுவென்ன அனியாயம் அந்தோ
யார்செய்ததோயிது பெருமாயம்
திடிரெனவிழ்ந்ததே தலைபாயம் என்ன
செய்குவேன் புருஷன்மாண் டார்காயம் (தெ)

ப-பெ—ஐயோ நானென்னசெய்வேன் என் கணவன் தெய்வலோ கஞ்சென்று தேவர்களையெல்லாம் உயிர்வதைபண்ணி தலைகள் கீழேவிழச்செய்தும் பின் எக்காரணத்தாலோ எனது புருஷன் தலையும் விழ்ந்து கிடக்கின்றனவே இனி யென்னுயிர் வாழப் போகிறதில்லை எனக்கோர் அக்கினி குழிவளர்த்துத் தருவீர் கள் அதில் நான் விழ்ந்து மடியவேணும்

(விஷயம்) சபையிலுள்ளவர்கள் பரிதாபமடைந்து அரசன் துக்கத் துடன்

விஜய—ஹே மாதுஸ்திரீ நீ தீயில்விழவேண்டாம் உனக்கு வேண் டிய கிராமங்களும் பற்பல பூஷணாதிகளும் தருகின்றேன் அத னைப் பெற்றுக்கொண்டு வாழக்கடவை.

ப-பெ—நீர் எனக்கு எவ்வளவோ தந்தபோதினும் இணங்கேன் தீயையும் வளர்ப்பிக்கமாட்டீர்கள், என் சமர்த்தைப் பார்ப் பீர்கள்.

## 12-வது சீன்.

### அக்கினி சுவாலை

(விஷயம்) அக்கினி ஸ்தம்பத்தை உச்சரிக்க வானமும் பூமியும் தீயானது கொழுந்துவிட்டெறிய அதில் விழக்கண்ட யாவர்களும் குய்யோமுறையென அழத்தொடங்கினர்கள் பட்டிப்பெண் பின் அக்கினியை குளிரச்செய்து ப்ரசன்னமாகி சபையோர்களை வணங்கி

ப-பெ—நான் தெய்வலோகஞ்சென்று இந்திராதிகளை சிநேகித்து ஏமராஜனிடம் உயிர்பெற்றெழ வரப்ரசாதம் பெற்று வந்தேன் இதோ எனது நாயகனைக் கண்டீர்களா?

விஜய—ஆஹா இதுவென்ன பெருமாச்சர்யம் இதுவரையிலும் இப்பேர்ப்பட்ட கண்காக்ஷிகளைக் கண்ணுற்றதில்லை. ஏ சுந்தரி யாருங் கழரொண்ணுக் காக்ஷித்தொழில்களை நீ யாரிடங் கற்றனை அவ்வாசானைக்கூறுவாய்.

ப-பெ—வேந்தே இதுவொரு காக்ஷியா எனதுஉபாத்தியாயர் கானகத்தில் வசிக்கின்றார் அன்னவர் தொழில்களைக் கண்ணுற்றால் எவ்வளவோ ஆச்சர்யமடைவீர்கள்.

விஜய—அவரேனிவ்விடத்திற்கு வரவில்லை.

ப-பெ—பெண்களது வாடையாகாது.

விஜய—நல்லது பார்த்தானந்திப்போம.

(விஷயம்) கழைக்கூத்தாடிகளுக் கெல்லாம் வெகுமதிதந்து மங்கைக்கு விலைமதியாதுயர்ந்த முத்தாபரணம் வஸ்திரங்கள் கொடுத்தனுப்பி அரசன் முதலியவர்கள் புறப்பட்டு கழைக்குருவைச் சந்தித்தல்.

---

## 13-வது சீன்.

### ஆரண்யம்.

(சண்பகவல்லி கருத்திற்கிணங்க டோாவமைத்து வந்தமருதல்)

### வேலுமயிலுந்துணே என்ற வர்ணமெட்டு

இராகம்-இங்கிலீஷ்கிளாகட் தாளம்-ரூபகம்

பல்லவி

கூறுவாய் விபரம் கோலாகலசீலாததி (கூ)

அநுபல்லவி

கூட்டத்தொடு சேருகாமலே காட்டில்தனி யாகவாழ்வதை (கூ)

மத்யமகாலம்

கொண்டதோ ரெண்ணமறிந்திலேன்
விண்டிடுவாய் மகிழ்கொள்ளுவேன்
விண்டலமெண்டிசை யோர்களி
கொண்டிட நின்றெழில்கண்டிட (கூ)

சரணம்

கோரும் விரத மறிந்திலேன் சந்ததம்
குணர்தங்கிய தவதுங்கனே வனமிக்குற மனமின்புற (கூ)

விஜய—ஹே சம்ப்ரம கழைக்குருவே நீயிக்கானம் வசிக்குங் காரணம் யாது?

வி-கு—பூபதி பெண்களைப் பார்க்கக்கூடாதென்றவிரதத்தைப் பூண்டிருக்கிறேன். பெயர் விக்கிரமக்குரு.

விஜய—எக்காரணத்தால் இவ்விரதங்கொண்டனே நவில்.

### மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

மன்னவா விஜயதரனே விரதந்தன்னை நவில்வேன் முன்னே
மாண்புடனே கேட்டிடுக்கோனே என்றும்

மங்குருதக லிங்கிளாவனா
தங்குமிங்கிளா தேவிமூங்கிலோர்

மாடப்புருசோடாய்வாழ்ந்துமே சல்லியனென்றஞ் சல்லரியென்று
மகிழ்ந்துகுஞ்சு கள்பொரித்துமே

அன்னதற்கிரைகள்தேடவே சென்றிட மூங்கில் ஒன்றோடொன்றுதாங்கி
அக்கினிகள் பற்றியாளவே சென்ற

ஆண்பெண்புருக்கள்வந் ததனைப்பார்த்துமே
அனலில்வீழ்வதாய் சபதஞ் செய்துமே
ஆண்புருவீழுந்தருணத்தில் பெண்புருவோட மண்புவியுற்று
ஆகாதுபெண் வாடையிகத்தில்

வி-கூ—ஏ வேந்தே இங்கிளா புரத்திற்கடுத்த இங்கிளா வனத்தில் இங்கிளாதேவி என்ற ஓராலயம் அதற்கிசைந்த அடர்ந்த மூங்கில்களுண்டு அப்புதரில் சல்லியன் சல்லியென்ற புருக்களிரண்டு குஞ்சுகள் பொரித்து இரைகொணர்ந்து வந்து பார்க்கையில் அக்கினிபற்றி குஞ்சுகள் மாளக்கண்ட புருவிரண்டும் வருந்தி தீயில் வீழப்போகுந் தருணத்தில் பெண்புரு அகன்றோடியது ஆண்புரு அப்பைரவியிடத்தில் வாதனைப்பெற்று தீயில்வீழ்ந்து மடிந்தது அப்புருவாகிய பூர்விக்யானந்தெரிந்து நான் மானுஷிக ஜன்ம நடிகர்கள் வம்ஸத்தி லுற்பவித்து பெண்களை நம்பக்கூடாதென்றும் கல்யாணம் செய்யப்படாதென்றும் மனவைராக்ய நிலையைப்பூண்டு இவ்வாலயத்திலேயே வசிக்கின்றேன்.

(விஷயம்) இவைகளைக்கேட்ட சண்பகவல்லியானவள் கண்கள் சினந்து தன்னிருக்கைவிடுத்து விக்கிரமகூத்தாடி முன்வந்து

## அத்திமாமுகனே என்ற வர்ணமெட்டு

இராகம்-பாரீஸ்மோகனம் தாளம்-ஏகம்

### தர்க்கம்

(ச) என்னடா பொய்யினை பேண்டாநீ யுரைத்தனை
இங்கிளாவனத்துற்றசங் கதியிதா பித்தனே

(வி) அன்னிதம் பெண்ணுவி யாகாதென் றுரைத்தேனே
ஐபோயிவ ளேன்வந்தாள் ஆவிநான் றரிப்பனே

(ச) பின்னுமுன்னு மாயுரைந்தாய் பேயனேகூத் தாடியே
பிழையில்லா தபடிக்கிக் கழறுவாய் போடியே

(வி) கன்னிகாநீ யிங்குற்றால் கற்பினுக் கழகிதோ
காவலனுக் கல்லவோ காதலித்தேன் வாதேனோ

## நெஞ்சுறத்திருந்துமாரன் என்ற வர்ணமெட்டு

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஏகம்

தர்க்கம்

(ச) இக்கிளாவனத்திலுற்ற சங்கதிநீ கூறுவாய்

(வி) இக்கிளாதேவி கோயிலுண் டாருமதைத் தெரிகுவாய்

(ச) அங்கெவ்விதகா ணம்

(வி) தங்குமூங்கிலுதாரணம்

(ச) தடையில்லாமலே உறுதியாகவே
சபையோரறிய நடந்தகாரணம் பகர்வாயே

(வி) சிறந்திடும் புருவிரண்டு தினமதில் வசித்திடும்

(ச) அறிந்தேனதனுமமென்ன அட்டியின்றி கூறிடு

(வி) அதன்பேர் சல்லியன்சல்லரியே

(ச) ஆம்பிஜம்பின் கூறுவையே

(வி) அருங்குஞ்சுகளுக் கிரைகொணர்ந்திட எரிந்துமாளஆண்
புருமடிந்திட பெண்ணுேட

(ச) அடடாமடையநவின்றதுசரி ஆண்புருமாண்டது பொய்யடா

(வி) அடியேதிருடி கபடமறிவேன் ஆண்புருமாண்டது மெய்யடி

(ச) அடிபென்றுரைக்கத் தரமோடா

(வி) அடர்வென் றுரைக்கத் தரமோடி

(ச) அறப்பேனுவினை குறிப்பையறியாய் நெருப்பில்பெண்புரு
இறக்கவதனை அறியாயோ

## சரசக்காரமாமா என்ற வர்ணமெட்டு

இராகம்-பியாகி தாளம்-ஏகம்

தர்க்கம்

(ச) திருட்டுக்கூத்தாடிப்பயலே பொய்யைச்
செப்புகிருய்சபைதனிலே

மிரட்டத் துணிந்ததாலே யுன்னை
மிதிப்பேன் உதைப்பேன் சிதைப்பேன் வதைப்பேன் (தி)

(வி) அரட்டுக்கு அஞ்சுவேனோ சீ
யடி நீயரசிதானோ
காட்டுவாதமேனோ பொல்லா
கபடி பொய்யினைக் கழறத் தகுமோ (அ)

## தேசோபகாராராஜாங்கம் என்ற வர்ணமெட்டு

இராகம்-மத்யமாவதி தாளம்-ஆதி

தர்க்கம்

பல்லவி

(ச) போடாவிர் முழுமூடனே பொய்விண்டாயடா (போ)

அனுபல்லவி

காடதனில்பெண்புருக் கனஸ்தனில்வீழ்ந்துற
கருத்தில்தரித்து வுதித்தேனிகத்தில் (போ)

பல்லவி

(வி) போடிவிர் மூடிகாதகி புரட்டிச்சொன்னாய் (போ)

அனுபல்லவி

மாடப்புருவானது மரிக்கத்தனவிலது
மாறுபாடாகவே கூறுதல்ஞாயமோ (போ)

சரணத்தொடர்

(ச) சல்லரி சண்பகம் காணே
(வி) சல்லியன் கூத்தாடி காணே
(ச) சாற்றுறாய் பொய்
(வி) ஏய்க்குறாய் மெய்
(ச) கூஜண மடிவாய்
(வி) கணங்கெடுவாய்
(ச) சண்டாளா வதைப்பேன்
(வி) சண்டாளி சிதைப்பேன்

சண்—அடேபிரஸ்டா இவ்விளாவனத்தில் சல்லியன் சல்லரி என்ற மாடப்புறாக்கள் குஞ்சுகள் பொறித்து இரைதேடிவந்துபார்க்கையில் குஞ்சுகளிரண்டுந் தீயில் மடிந்ததைக்கண்டு அவ்வக்கினியில் பெண்புறா வீழப்போகுந்தருணம் ஆண்புறா அகன்றோட அதனையறிந்து இங்கிளா தேவியினிடம் வரத்தைப் பெற்று தீயில்மாள அச்சல்லரியென்ற பெண்புறா நான் விஜயங்க அரசனுக்கு மகளாயுதித்து சண்பகவல்லியென நாமகரணம் பூண்டு ஆடவர்களை நம்பக்கூடாதென்ற விரதமிலையை யனுட்டித்து கற்பை வழுவாதிருக்க நீ மாறுபாடாக ஆண்புறா வீழ்ந்ததென்றுரைக்கிறாய் இதுயார்க்கேனும் ஒப்புமா? இவ்வுலகம் அறியாதா?

வி·கூ—சல்லியனென்ற ஆண்புறா நானே தீயில் வீழ்ந்து கழைக்கூத்தாடி வங்கிஷத்தில் ஜென்மித்து விக்கிரமக்கூத்தாடியென பெயர்தரித்து ஒருக்காலும் பெண்களை நம்பப்படாதென்ற பிரதிக்கினை செய்தது இவ்வுலகம் அறியாததா? ஸ்திரீயைப் பார்க்கக்கூடாதென்று இக்கானகத்திலேயே வசிக்கின்றேன் உன்னைக்கண்டதின்மீது என்னுயிர் தரியாது எனது பழியை ஏற்றுக்கொள்ளடி மூர்க்கி.

(விஷயம்) ஒருவரோடொருவர் கைகலந்து கீழுமேலும் வீழ்ந்தருளக்கண்ட அரசன் இருவர்களையும்விலக்கி சமாதானப்படுத்தி

ஏமிமாயமோ என்ற வர்ணமெட்டு

இராகம்-காம்போதி தாளம்-ரூபகம்

பல்லவி

இந்தமாதிரி போலவேநான் எங்குங்கண்டிலேன்
ஈதறிகிலேன் (இ)

அநுபல்லவி

மூந்தினஜென் மந்தனிலே
மூங்கிப் புதரிலே பாங்காய்ப் புறாவான (இ)

சரணம்

சல்லியன் சல்லரி தான்புறா வானதும்
சண்பக வல்லியாய் தானிங் குதித்ததும்

நல்ல விரதங்கள் நாட்டினிற் பூண்டதும்
ஞாய மறியாமல் வீண்வழக் கானதும் (இ)

விஜய—ஆஹா இதென்ன ஆச்சர்யமாகயிருக்கிறது நாம் வந்த காரணமென்ன இங்கு நடந்த கோலமென்ன யோசிக்கில் ஆன்ரோர் வாக்கியமானது.

முன்னூல் விருத்தம்

உடம்புவரு வகையறியீ ருயிர்வகையை யறியீர்
உடல்பருக்க வுண்டுமித முறங்குதற்கே யறிவீர்
மடம்புகுபேய் மனத்தாலே மயங்குகின் றீர்மனத்தை
வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறைகற் றரியீர்
இடம்பெறுபொய் வாழ்க்கையிலே இன்பதுன்ப மடுத்தே
எண்ணியெண்ணி யிளைக்கின்றீர் ஏழையுல கீரே
நடம்புரியென் றனித்தந்தை வருகின்ற தருணம்
நண்ணியது நண்ணுமினோ புண்ணியஞ் சார்வீரே

என்றபடி இவ்விருவர்களும் முன்ஜென்மத்தில் புறுக்களானதும் ஒருவரோ டொருவர் தாக்கல் தெரியாமல் அக்கினியில் வீழ்ந்ததுஞ் சரியே இக்காலம் இவர்கள் இப்புவியிற் ஜென்மித்து வைராக்கிய விரதம் பூண்டதுஞ்சரி நாமிவ்விருவர்களை சமாதானஞ்செய்து சண்பகவல்லியை கழைக்குரு கர்த்தனருக்கே விவாஹஞ் செய்வதே நன்முறை.

மிக்க புகழோங்கும் விக்ரமக்குருவே நீங்களிருவரும் பண்டையத்தில் புறுக்களாக வாழ்ந்து இக்கால மிக்குவலயத்தில் ஜென்மித்து வைராக்கிய நிலைகளைப்பூண்டது தெய்விக சங்கற்பத்தால் விமோசன்கால முற்றுமையால் நீர் சண்பகவல்லியை மணந்து வாழக்கடவது

வி-கு—(சம்மதித்து மௌனமுற்றிருக்க)

விஜய—அம்புவி புகழும் சண்பகவல்லி நீயிவ்வுலகத்தினிடம் இன்னாள் பரியந்தம் நோன்பிழைத்தது சரி உனக்கு விமோசன காலமுற்றமையால் தெய்வமாணது இவ்விக்ரமக் கூத்தாடியை

கூட்டிவக்கு சேர்த்தது. இனி யாதொரு விக்கினமின்றி மணக் கோலமாகி வாழ்ந்து வருவதே பெரும்பாலு முக்யகடமை.

(இருவர்கள் கருத்தையறிந்து விஜயநகரத்திற் கழைத்தேகுதல்)

---

## 14-வது சின்.

### அரண்மனை கல்யாண மஹோற்சவ மண்டபம்.

(விஷயம்) நல்லதினம் பார்த்து அர்சர்களுக்கறிவித்து அதிவிமரிசையுடன் மங்கள வாத்திய மொலிப்ப விக்கிரமக்கூத்தாடி எழுந்திருந்து சகலருக்கும் ஆசீர்வதித்து திருமாங்கல்யத்தை கரத்தில் வாங்கி சண்பகவல்லியின் கழுத்தில் தரித்தல்.

நீபதமூலகினுநன்னு என்ற வர்ண மெட்டு

இராகம்-ஹடபைரவி தாளம்-ஆதி

பல்லவி

பூர்ண கலாதிருவதனியின் கல்யாணமே
கருதினானே மணமே செய்தேன் க்ஷணமே (க)

அனுபல்லவி

சுலோகமந்த்ர ஜோபிதமே
சோபனமங்கள ஸ்தாபனமேகூற (க)

சரணம்

மாதவர்கள் வேதியர்கள்
வாழ்ந்திடவேபுகழ்ந் தேற்றிடவே
மாதுசண்ப கவல்லியன்
மாங்கல்யந்தனை கழுத்திற்பூட்டினேன் பூர்ண (க)

(விவாஹ மஹோற்சவம் நடைபெற்றன)

விக்கிர—மந்திரி பட்டி இன்றோடே ஆரண்ய சஞ்சாரம் திங்களாறுஞ் சரியாகினவா?

பட்டி—ஆம் சக்ராதிப.

(அரசனும் மந்திரியும் சுயவடிவங்கொள்ளுதல்)

(விஷயம்) கண்ட விஜயபங்கவாசன் முதல் சகலர்களும் விக்கிரமாதித்த சக்ரவர்த்தியின் காலில் வீழ்ந்து பணிதல்

பழநிநாதன் பரப்பிர்மாதன் என்ற வர்ணமெட்டு

இராகம்-சங்கராபரணம் தாளம்-ஆதி

பல்லவி

புலனயிந்த்ரா புகழுஞ்சுந்த்ரா
போற்றினேன் பதந்தனை (பு)

அனுபல்லவி மகுடம்

புகழ்ந்திடுங் குணவாதனே சிறந்திடுந் தயைவிரதனே (பு)
புத்திமகுத்துவகர்த்தனேஎத்திசைவெற்றிகொள்சுத்தனே (பு)
புஜபலவாசர்களனுதினந் தொழுஞ்சரணகதிகடல்வனே (பு)

சரணம்

சிவத்தியானமுள்ளயோகா சிந்தையிறந்தின்வைபோகா
பவுரிஷி அம்ஸவுற்சாகா
பங்கமிலாதசிங்காசனா தங்கஞ்சொல்சங்கீதமோகனா (பு)

விஜய—சக்ராதிபா நல்லயுக்தி செய்தீர்கள் இவ்விதஞ் செய்யாவிடில் எனது புதல்வி சண்பகவல்லி ஒருகாலத்தும் வதுவைக்கிணங்காள்.

(விஷயம்) அவரவர்களுடைய வந்தனை வழிபாடுகளை ஏற்றுக்கொண்டு சண்பகவல்லியுடன் வேதாளத்தின்மீது ஆரோகணித்து உச்சினிபுரம் அடைந்து அரசுபுரிந்தனர்.

சுபம். சுபம்.

---

அமரநபி என்ற வர்ணமெட்டு

இராகம்-தேசிகம் தாளம்-ஆதி

பல்லவி

சிவசிருஷ்டியே யாவும் சிவச்செயல் விர்த்தியே (சி)

அனுபல்லவி

| | |
|---|---|
| பவமுழுதும் நீங்கிடும் | பக்திமிக வோங்கிடும் |
| பற்றறும்ஞானிம | ணத்துள்வசித்திடும் |
| சத்துவசித்துமி | குத்துத்துதித்திடும் (ஸ) |

தொகையறு

கற்றதால்யாதுபயன் கடவுளைத்துதியாதார்
கல்லாத நல்லறிவினர்
பெற்றதாய்தந்தைமுதல் பெண்ணாசையற்றுமே
பெட்புடன் தவமேவுவர்

சரணத்தொடர்

| | |
|---|---|
| மவுனப்ரக்யாதியே | மகிமைசற்ஜோதியே |
| மங்களகங்கைகு | லத்துறுந்தங்கஞ்சொல் |
| சண்பகவல்லிச | ரித்திரமங்களம் (ஸ) |

சண்பகவல்லி சரித்திரம்

சம்பூர்ணம்.

உ

# விளம்பரம்.

செந்தமிழ்ச் செல்வர்காள்!

இதுவரை நீங்கள் எத்தனையோ டிராமா சரித்திரங்களைப் பார்த்திருப்பீர்களாயினும், முதகுளத்தூர் சோடச அஷ்டாவதானி சரவணக்கவிஞரவர்கள் குலதிலகனாகிய என்னால் இயற்றிய இவ்வரிய சரித்திரங்களில் பாரீஸ், இந்துஸ்தான், சிந்து, தியாகராஜ சுவாமிகள் கீர்த்தனை வர்ணமெட்டுகள் இன்னும் அனேக அபூர்வ சந்தவர்ணமெட்டுகளும் ஏராளமாயமைத்து சொற்பக்காப்பிகளே தயாரித்திருக்கிறபடியால் ஒவ்வொருவர்களும் வாங்கி முக்கியம் படித்துணரவேண்டும்.

## சரித்திர விபரம்.

| | | | |
|---|---|---|---|
| சம்பூரண சண்பகவல்லி சரித்திரம் | 0 | 4 | 0 |
| சப்பிரம சரஸ தன அமராவதி சரித்திரம் | 0 | 4 | 0 |
| ஜெயப்ரதை சரித்திரம் (அச்சில்) | 0 | 5 | 0 |
| பதபாடனி சரிததிரம் | 0 | 5 | 0 |
| வள்ளி சரித்திரம் | 0 | 5 | 0 |
| அல்லி சரித்திரம் | 0 | 6 | 0 |
| சதார சரித்திரம் | 0 | 5 | 0 |
| பாதவிகண்ணகி சரித்திரம் | 0 | 6 | 0 |
| நல்லதங்காள் சரித்திரம் | 0 | 6 | 0 |
| காந்தரூபி சரித்திரம் | 0 | 5 | 0 |
| பூலோகரம்பை சரித்திரம் | 0 | 8 | 0 |
| ஞானசௌந்தரி சரித்திரம் | 0 | 6 | 0 |
| சபுரியத்து சரித்திரம் | 0 | 6 | 0 |
| சந்திரவதி சரித்திரம் | 0 | 12 | 0 |

ஆக சரித்திரம் 12 கூடிய சீக்கிரம் வெளிவரும் எதிர்பார்த்திருப்பீர்களாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இங்ஙனம்,

**மு. தங்கம்பிள்ளை,**

வித்வக்ஷேத்ர தேரிருவேலி.